# வானக அப்பமே வர வேண்டும் இவ்

வானக அப்பமே வர வேண்டும் இவ்
வையக உணவே வர வேண்டும்
விண்ணக உறவைத் தர வேண்டும் - நான்
உன்னுடன் வாழும் வரம் வேண்டும் - 2

**1**
உள்ளத்தில் உனக்குக்
கோவில் செய்தேன் - அதில்
உயர்ந்த கோபுரம் கட்டி வைத்தேன் - 2
அன்பெனும் விளக்கை ஏற்றி வைத்தேன் - 2
அங்கு வாழ்ந்திட மன்னவா வரவேண்டும்
வரவேண்டும் வரவேண்டும்

**2**
தந்தையின் உறவை நாடி நின்றேன் - எந்தன்
தன்னலம் தவிர்க்க அன்பைக் கேட்டேன் - 2
தந்தையின் உறவின் பாலமாக (2) - எந்தன்
சொந்தமாய் சுதன் நீ வரவேண்டும்
வரவேண்டும் வரவேண்டும்